

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வீனஸ் நகர், ஜெயந்தி நகர் பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்கு 8.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள குழாய் மூலம் கழிவுநீர் அகற்றும் திட்டம் மற்றும் உந்து நிலையம் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கார்த்திகேயன் சாலை, வெங்கடேசன் சாலை, மாதவரம் நெடுஞ்சாலை மற்றும் ராஜா தெரு ஆகிய பகுதிகளில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழைய குடிநீர் குழாயை மாற்றி புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், ஆணையர் ககன்தீப் சிங் பேடி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகரில் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தால் 110 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள 230/33 கிலோ வோல்ட் வளிமகாப்பு துணை மின் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, வி.செந்தில்பாலாஜி, பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா.கிரிராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ப.ரங்கநாதன், மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 13.5.2023 அன்று முகாம் அலுவலகத்தில், தமிழர்களின் மாபெரும் பேரரசான சோழ சாம்ராஜ்ஜியத்தின் வரலாற்று சிறப்பினை விளக்கும் 'சோழர்கள் இன்று' நூலினை வெளியிட்டார். உடன் நூலின் தொகுப்பாசிரியர் சமஸ், தினமலர் ஆசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, வெளியீட்டாளர் ஆர். லட்சுமிபதி ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2023) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், வில்லிவாக்கம் சந்திக்கடவு எண்.1க்கு மாற்றாக வடக்கில் கொளத்தூர் பிரதான சாலையையும் தெற்கில் ஐ.சி.எப். சாலையையும் இணைக்கும் வண்ணம் 61 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேயர் சிட்டிபாபு மேம்பாலத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, வி. செந்தில்பாலாஜி, பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, இரா. கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், துணை மேயர் மு. மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.






922 நிலஅளவர் மற்றும் வரைவாளர்களுக்கு அரசுப்பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா

15.05.2023 திங்கட்கிழமை
காலை 10.15 மணி, கலைவாணர் அரங்கம், சென்னை



தமிழ்த்தாய் வாழ்த்து

தலைமை — திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமசந்திரன் அவர்கள்
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்

முன்னிலை — திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள்
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

திரு பி.கே.சேகர்பாபு அவர்கள்
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்

பணிஆணைகளை வழங்கி விழாப் பேருரை — திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

நாட்டுப்பண்

மற்றும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
வணக்கத்திற்குரிய மேயர்,
நாடாளுமன்ற,
சட்டமன்ற உறுப்பினர்கள்,
அரசு அலுவலர்கள் மற்றும்
சீர்மிகுபெருமக்கள்
அனைவரையும்
வருக.. வருக.. என
அன்புடன் வரவேற்கிறோம்.

வரவேற்று மகிழும்
தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு
அரசு அங்கீகார ஆணை எண் : 896/81 நாள்: 26.08.1981
மாநில மையம்